பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 05 திங்கட்கிழமை (18-05-1992) UTHAYAN — A Lively National Tamil Daily ஒளி 172

# சர்வதேச மத்தியஸ்த முயற்சியை தடுப்பதே இந்தியாவின் நோக்கம்!

## லோறன்ஸ் திலகர் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 18

இனப் பிரச்சினை விவகாரத்தில் சர்வதேச நாடுகள் குறிப்பாக மேற்கத்திய நாடுகள்— மத்தியஸ்த முயற்சியில் ஈடுபடுவதைத் தடுக்கும் நோக்கத்தைக் குறியாக வைத்தே இந்தியா விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தடை விதித்துள்ளது. இந்தியாவின் இந்த வீணான முயற்சி தோல்வியையே தழுவும்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் பிரமுகர் லோறன்ஸ் திலகர் தெரிவித்ததாக ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இத்தடையால் எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் எந்தப் பின்னடைவும் ஏற்படாது. போராட்டத்திற்கான சகல முன்னெடுப்புகளையும் தயாரிப்புகளையும் எமது தாயகத்திலேயே நாம் மேற்கொண்டு வருகின்றோம். எனவே இந்தியாவில் விதிக்கப்பட்ட தடை எம்மை பெரிய அளவில் பாதிக்காது. —இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். [உ-எ]

# அரசியல் யதார்த்தங்களை இலங்கை உணர வேண்டும்

## எச்சரிக்கிறார் இந்தியத் தூதர் ஜா

கொழும்பு, மே 18

இந்தியா விடுதலைப் புலிகள் மீது விதித்துள்ள தடையால் உருவாகியுள்ள சில கடினமான அரசியல் யதார்த்தங்களை இலங்கை அரசு உணர்ந்திட வேண்டும்—

விடுதலைப் புலிகளுடன் இனிமேல் பேச்சுக்களைத் தொடங்குவதற்கு முன்னர் கொழும்பு அரசு யதார்த்த நிலைமையைக் கருத்திற் கொண்டு சிந்திக்க வேண்டும்—

இவ்வாறெல்லாம் இலங்கை அரசாங்கத்தை எச்சரித்திருக்கிறார் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் திரு என். என். ஜா.

கொழும்பு "சண்டே ரைம்ஸ்" ஆங்கில வார இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு எச்சரிக்கும் தொனியில் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# களுவாஞ்சிக்குடியில் கைதான 10 மாணவரின் கதி என்ன?

## பொலிஸார் தெரியாது என கைவிரிக்கின்றனர்

மட்டக்களப்பு, மே 18

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிப் பகுதியில் கடந்த 12 ஆம் திகதி தமிழ் மாணவர்கள் நடத்திய பேரணியின்போது பொலீஸாரினால் கைது செய்யப்பட்டவர்களில் பத்து மாணவர்கள் என்னவானார்கள் என்று தெரியவில்லை.

அவர்களைப் பற்றி தமக்குத் தெரியாது என்று பொலீஸார் கைவிரித்து விட்டனர்.

மாணவர்கள் கைது செய்யப்படுவதையும் கடத்தப்படுவதையும் கண்டித்து மட்டக்களப்புப் பகுதி மாணவர்கள் கடந்த 12 ஆம் திகதி பேரணி ஒன்றை நடத்தினர் என்பதும்—

பேரணியில் சென்றோர் மகஜர் கையளிப்பதற்காக களுவாஞ்சிக்குடி உதவிப் பொலீஸ் அதிதியட்சகர் அலு

[6 ஆம் பக்கம் பார்க்க]

# எத்துணை எதிர்ப்புவரினும் சமாதான முயற்சி தொடரும்

## யாழ். வந்து சென்ற பிக்கு தகவல்

கொழும்பு, மே 18

எமது சமாதான முயற்சிகளுக்கு பல வழிகளிலும் எதிர்ப்புக்கள் வந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் அதுபற்றி நாங்கள் கவலையடையவில்லை.

எத்துணை எதிர்ப்பு, எங்கிருந்து வந்தாலும், எமது சமாதான முயற்சிகள் தடைப்படாது. அது தொடரும்.

அண்மையில் யாழ். வந்து திரும்பிய பௌத்த குருமார் குழுவின் செயலாளரான பண்டித மாதம்பாகம அஸாஜி தேரர் இவ்வாறு பி. பி. ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வெளியாகும் பத்திரிகைகள் சில தமது சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையில் பிரசாரத்தை நடத்துகின்றன என்றும் —

தாம் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டி ஒன்றை சிங்கள பத்திரிகை ஒன்று, திரித்துச் செய்தி வெளியிட்டது என்றும் அஸாஜி தேரர் மேலும் கூறினார். (ஓ-10)

# மண்டைதீவுப் படையினர் நேற்று ஷெல் தாக்குதல்

## யாழ். நகரப் பகுதி அதிர்ந்தது

யாழ்ப்பாணம், மே 18

மண்டைதீவு இராணுவத்தினர் நேற்று திடீர், திடீரென யாழ். நகரின் கரையோரப் பக்கமாக ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

நேற்று நண்பகல் 11-15 மணியளவிலும், மாலை 5-45 மணிக்குப் பின்னரும் அடுத்தடுத்து ஷெல்கள் ஏவப்பட்டன.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் இடம்பெற்ற இந்த ஷெல் தாக்குதல்களினால் நகரப் பகுதி அதிர்ந்தது.

கோட்டைக்குச் சமீபமாக— கொட்டடிக் கரையோரப் பகுதியில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

படையினர் யாழ் கோட்டைப் பக்கத்தை நோக்கி சரமாரியான வேட்டுக்களையும் தீர்த்தனர். [ஓ-3-5-15-162-51]

# வவுனியாப் பகுதியில் அகோர குண்டு வீச்சு!

## வீடுகள் பல சேதமடைந்தன

யாழ்ப்பாணம், மே 18

வவுனியா, கட்டையர்குளம் பகுதியில் நேற்றுக் காலை இரு தடவைகள் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

காலை 6 மணிக்கும் பின்னர் காலை 8 மணிக்கும் ஸ்ரீலங்கா விமானப் படையினர் குடியிருப்புக்களை நோக்கி அகோர குண்டு வீச்சுக்களை நடத்தினர்.

முதலில் மூன்று பொம்மர்கள் தாக்குதலை நடத்தின. இதனால் ஒரு வீடு முற்றாக சேதமானது. மற்றும் பல வீடுகள் சேதங்களுக்கு உள்ளாகின.

இரண்டாவது தடவையும் மூன்று பொம்மர்கள் குண்டு வீச்சுக்களை நடத்தின. அப்போதும் வீடுகள் பல சேதமடைந்தன.

அந்தப் பகுதியில் ஹெலி ஒன்றும் கண்டபடி வேட்டுக்களைத் தீர்த்தது. (ஓ-3)

# யுத்தத்தை தொடருவதற்கு மேலும் ரூ.540 கோடி தேவை

## வரியை உயர்த்தியும் போதாது

கொழும்பு மே 18

வடக்கு—கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு கணிசமான அளவு மேலதிக நிதி தேவைப்படுகிறது. அதனாலேயே பாதுகாப்பு வரியை ஒரு சதவீதத்திலிருந்து மூன்று சதவீதமாக உயர்த்த முடிவு செய்யப்பட்டது.

இவ்வாறு பாதுகாப்பு வரி உயர்த்தப்பட்டதற்கான காரணங்களை விளக்கி நிதித்திட்டமிடல் அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது.

இந்த வரி உயர்வினால் இவ்வருடத்தில் எஞ்சிய எட்டு மாதங்களிலும் 240 கோடி ரூபாவைப் பாதுகாப்புச் செலவுக்குத் திரட்ட முடியும் என்றும் அந்த அறிக்கையில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த 240 கோடி ரூபா போதாது என்றும், இதனை விட மேலும் 300 கோடி ரூபா தேவைப்படும் என்றும் திறைசேரியின் பிரதிச்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# வல்வையை நோக்கி ஆட்லறித் தாக்கு!

யாழ்ப்பாணம், மே 18

நேற்றிரவு 7 மணி முதல் வடமராட்சிப் பகுதியை நோக்கி பலாலியிலிருந்து ஆட்லறி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

வல்வெட்டித்துறை, மயிலியதனை, ஊரிக்காடு ஆகிய பகுதிகளில் பல ஷெல்கள் விழுந்து வெடித்ததாக முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன. ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை தகவல் கிடைக்கவில்லை. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுலம் மகாவித்தியாலயம்
யாழ்ப்பாணம்.

## க.பொ.த (உயர்தரம்) அனுமதி-1994

க.பொ.த. (சா.த) தேர்வில் 3 பாடங்களில் திறமைச் சித்தியுட்பட 5 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

கற்பிக்கப்படும் பாடங்கள்:

★ தமிழ்
★ இந்து சமயம்
★ கர்நாடக சங்கீதம்
★ வரலாறு
★ இந்து நாகரிகம்
★ பொருளியல்

விண்ணப்ப முடிவு திகதி: **1992—05—25**

— அதிபர்.

[சி-2427]

## கண்ணீர் அஞ்சலி

### வி. ஜெயபாலன்

மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவனும், விடுதி முகாமையாளராகவும், பழைய மாணவர் சங்கச் செயலாளராகவும் இருந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு அளப்பெரும் பணியாற்றியவரும், என் இனிய நண்பனுமாகிய வி. ஜெயபாலன் அவர்களின் பிரிவு மானிப்பாய் வாழ் மக்களுக்கும் எனக்கும் பெரும் அதிர்ச்சியாகவும் துக்கமாகவும் அமைந்துவிட்டது.

அவர்களின் ஆத்மா இறைவன் நிழலில் இன்புற்றிருக்கப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தாருக்கும் என் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றேன்.

— கா. ஜெகதீசன்.

மானிப்பாய் தெற்கு.
மானிப்பாய்.

[21041]

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு: **21 - 11 - 1960**
அநியாய அழிப்பு: **18 - 5 - 1987**

### அமரர் அப்புலிங்கம் திருக்கேதீஸ்வரன் (ராசன்)

மகனே உன் அன்பான
புன்சிரிப்பாலும் பண்பான பேச்சாலும்
பணிவான நடத்தையாலும்
எம் இதயம் கவர்ந்த செல்வமே
காலன் உன்னை இளம் வயதில்
பறித்தாலும் ஐந்து ஆண்டு சென்றாலும்
உம்மை எங்களால் மறக்கமுடியவில்லை
உமது ஆத்மா சாந்தி பெற
இறைவனை வேண்டி உமது பிரிவினால்
வாடி நிற்கும்.

ஐயா, அம்மா,
சின்னையா, சின்னம்மா,
சகோதரிகள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

977/1 கே. கே. எஸ். றோட்,
வண்ணார்பண்ணை.

[21042]

## இன்று

யாழ்ப்பாணம், மே 18

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இரண்டாம் கட்ட ஆட்டங்களில் இன்று நவசக்தி அணியை எதிர்த்து விநாயகர் அணி மோதும். இந்த ஆட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும். [உ]

★ ★ ★

வண்ணை சிவன்கோவிலில் நடைபெற்று வரும் இலட்சார்ச்சனை நிகழ்ச்சியில் இன்று மாலை 6.15 மணிக்கு பிரம்மஸ்ரீ எஸ். நித்தியானந்த சர்மா ''என்னப்பன் கண்ணப்பன்'' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். [உ]

## நாளை

யாழ்ப்பாணம், மே 18

யாழ். பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர் ஒன்றிய உறுப்பினர்களுக்கான கூட்டம் நாளை மாலை 4 மணிக்கு ஒன்றிய அலுவலகத்தில் நடைபெறும் என ஒன்றியத் தலைவர் அறிவித்துள்ளார். [உ]

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் நாளை மாலை 4 மணி தொடக்கம் திருஞானசம்பந்தர் குருபூசை அனுஷ்டிக்கப்படும். கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். [உ]

★ ★ ★

திருஞானசம்பந்தர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருமுருகர், திருநீலநக்கர் ஆகிய நான்கு நாயன்மார் குருபூசைத் தின வழிபாடுகள் நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ். கலைப்புலவர் வீதி திருவாசக மன்றத்தில் நடைபெறும். மெய்கண்டதேவர் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்ச்சியில் பண்டிதர் சி. கார்த்திகேசு சிவஞான உரையும், திரு.ச. முத்தையா, திரு. க. இராசதுரை ஆகியோர் சிவஞான இசையும் வழங்குவர். [உ-162]

★ ★ ★

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் 1991 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. [சாதாரண] தரப் பரீட்சையில் அதி சிறப்பாக சித்தியடைந்த மாணவிகளுக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இன்று காலை 8 மணிக்கு பரிசளித்து கௌரவிக்கவிருக்கின்றது.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட திட்டப் பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதன் கலந்துகொண்டு பரிசில்களை வழங்குவார். சிறப்பு விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கத் தலைவி செல்வி புஷ்பா செல்வநாயகம் பங்குகொள்வார். (உ)

## செஞ்.குழு இன்று வலி-வடக்கிற்கு செல்லும்

யாழ்ப்பாணம், மே 18

வலி. வடக்கு பகுதியில் சிக்கியுள்ள ஐம்பதுக்கு மேற்பட்டவர்களின் நலன்களைக் கவனிக்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் இன்று அங்கு செல்லவிருக்கின்றனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி செல்வி மரிஜோவும் மற்றும் வைத்திய அதிகாரி ஒருவரும் அங்கு செல்கின்றனர். அங்குள்ளவர்களின் ஆரோக்கிய நிலைமை மற்றும் தேவைகள் குறித்து அவர்கள் கேட்டறிவார்கள். [உ-3]

## நல்லதொரு தேசம் உருவாக தொழிற்கல்வி முக்கியமானது

### ''துலங்கல்'' வெளியீட்டு விழாவில் இளம்பரிதி

திருநெல்வேலி, மே 18

நல்லதொரு தேசம் உருவாகவும் தொழில், தொழில் நுட்பம் வளர்ச்சி அடையவும் கல்வி முக்கியமானதும், அத்தியாவசியமானதுமாகும். ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பே சிறந்த வெற்றியைத் தர முடியும். இதனை நாம் போராட்ட வாயிலாகவும் உணர்ந்துள்ளோம். ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் வெளியிடப்பட்ட 'துலங்கல்' பத்திரிகை இன்று இம்மண்ணின் தேவையைச் சுட்டிக்காட்டி தொட்டு நின்கின்றது.

யாழ். பல்கலைக்கழக தொழிலாளர் கல்விக்கழக பயிற்சிநெறி மாணவரின் 'துலங்கல்' பத்திரிகை வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு பேசும்போது விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி இவ்வாறு கூறினார்.

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தனது ஆசியுரையில் கூறியதாவது;

இன்றைய கால கட்டத்தில் தமிழில் சஞ்சிகைகள் வெளிவருவது மிகவும் குறைவாகவே உள்ளது. இதனை நீக்க புத்திஜீவிகள், கல்விமான்கள் முன்னின்று தமிழை வளர்த்து தமிழில் சஞ்சிகை வெளியீட்டை அதிகரிக்க பாடுபட வேண்டும் என்றார்.

தொழிலாளர் கல்விக் கழகத் தலைவர் க. பரராசசேகரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம்பிள்ளை கருத்துரை வழங்கினார். பேராசிரியர்கள் பொ. பாலசுந்தரம்பிள்ளை, வ. ஆறுமுகம், பதிவாளர் க. பரமேஸ்வரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள் [த-143-85]

## ஆங்கில ஆசிரியர் பயிற்சி முடிவுகள்: 10 மாதங்களின் பின் வெளியாகின

கொழும்பு, மே 18

1991 ஆகஸ்டில் நடந்த ஆங்கில ஆசிரியர் பயிற்சி முடிவுகள் வெளியாகியுள்ளன. இப் பரீட்சை நடந்து பத்து மாதங்களாகியும் முடிவுகள் வெளியாகவில்லையே என்று முறைப்பாடுகள் கிடைத்ததைத் தொடர்ந்தே கல்வி அமைச்சு அதிகாரிகள் இந்த நடவடிக்கையை எடுத்தனர்.

பரீட்சை முடிவுகளை பரீட்சார்த்திகள் இவ் வாரத்தில் பெறக் கூடியதாகவிருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பரீட்சையில் 60 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் நியமனம் பெறுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## இரு நூல்கள் அறிமுகம்

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றமும், தேசிய கலை இலக்கியப் பேரவையும் இணைந்து நடத்தும் முருகையனின் இரு நூல்கள் பற்றிய அறிமுகமும், கருத்துரையும்
[6 ஆம் பக்கம் பார்க்க]

★ வைத்திய சேவை ★

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை
முன்னாள் வைத்தியர்
Dr. S. பாலச்சந்திரன்

தனது சேவையை
யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு
முன்னால் ஆரம்பித்துள்ளார்.

நேரம்: தினசரி பகல் 12-00 — பி. ப. 2-00 மணி வரை
பி.ப. 4 00 மணி — பி.ப. 6-00 மணி வரை
கிளை:- பிளாக் றோட், சங்கானை.
நேரம்; மாலை 7-00மணி — காலை 7-00மணி வரை
(21040]

கலை வண்ணம் மிளிரும்
கவர்ச்சியான
அச்சு வேலைகளை
உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ள

V

★ உதயன் ★
292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
[சி-2243]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊவாவில் தமிழ் இளைஞர் மீண்டும் கைதாகின்றனர்

யாழ்ப்பாணம், மே 18

ஊவா மாகாணத்தில் உள்ள தமிழ் இளைஞர்கள் குறித்து அங்குள்ள சில சக்திகள் பொலிஸாருக்கு பொய்த் தகவல்களை வழங்கி வருவதாகவும்— அதனால் அங்குள்ள இளைஞர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழனன்று இரண்டு மலையக இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த சில மாதங்களாக அமைதி இழந்து பின்னர் வழமைக்குத் திரும்பியிருந்த ஊவா பகுதி மீண்டும் பதற்றமான நிலைமைக்குச் செல்வதாக அங்குள்ள தொழிற்சங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே தீய சக்திகளின் விசமத்தனத்தால் பல மலையக இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (த-5)

## இந்திய இடைத் தேர்தலில் கொள்ளைக்காரி போட்டி

புதுடில்லி, மே 18

புதுடில்லி தெற்கு நாடாமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் இரு கிந்தி நடிகர்களும், ஒரு பிரபல கொள்ளைக்காரியும் முக்கிய வேட்பாளர்களாகப் போட்டியிடவிருக்கின்றனர்.

இந்திரா காங்கிரஸ் சார்பில் ராஜேஷ் கண்ணாவும் பாரதிய ஜனதாக் கட்சியின் சார்பில் சத்துருகன் சின்ஹாவும் போட்டியிடுகின்றனர்.

கொலை, கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக சிறை வைக்கப்பட்டிருக்கும் பூலான் தேவியும் இத் தொகுதியில் போட்டியிடுகிறார் புதுடில்லி தெற்கு நாடாளுமன்றத் தொகுதிக்கான சுயேச்சை வேட்பாளர் ஒருவர் மரணமானதால் அங்கு தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

அடுத்த மாதம் 8ஆம் திகதி இந்த இடைத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. (த-எ)


## தீவக பாக்கியம் குழந்தைகள்
## ★ சிகிச்சை நிலையம் ★

கே. கே. எஸ். வீதியில் மனோகராச் சந்தியில் இருந்து 100 யார் தொலைவில், காலை 8-30 தொடக்கம் பிற்பகல் 1-30 வரையும், கல்வியங்காட்டிலிருந்து ஒரு மைல் தொலைவிலுள்ள இருபாலைச் சந்தியில் கலை 8-30 தொடக்கம் மாலை 6-30 வரையும் சேவையாற்றும்.

(21039)


## பொங்கல் உற்சவம்

கச்சாய் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த வைகாசி விசாகப் பொங்கல் உற்சவம் இன்று திங்கட்கிழமை நடைபெறும்.

## அடுத்த மாதம் விசாரணை

கொழும்பு, மே 18


ராஜீவ்காந்தி கொலை வழக்கு விசாரணை எதிர் வரும் ஜூன் மாதம் பத்தாம் திகதிக்கு முன்னர் ஆரம்பமாகவிருக்கிறது.

'திவயின' வார இதழ் இத் தகவலை வெளியிட்டிருக்கிறது. [த-எ]

## மகஜர்கள் இவ்வாரம் கையளிப்பு

யாழ்ப்பாணம் வந்திருந்த போது தம்மிடம் கையளிக்கப்பட்ட மகஜர்களை இவ்வாரம் ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் பௌத்த மதத் தூதுக்குழு கையளிக்கவிருப்பதாக தூதுக்குழுவின் அமைப்பாளர் மாதம்பக அஸாஜீ தேரர் தெரிவித்தார். (த-எ)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**சின்னத்தம்பி சிவஞானரத்தினம்**

(சின்னராஜா, S.S.R)

மண்ணுக்கு: **01-03-1927** விண்ணுக்கு: **08-06-1982**

திதி: 18—05—1992 (திங்கட்கிழமை)

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், குடும்பத்தின் ஒளி விளக்காய், பாசத்தின் உறைவிடமாய் எம் நெஞ்சமெல்லாம் நிலைத்திருந்த குல விளக்கே! எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத் துயில் கொண்ட ஒளி விளக்கே! உங்கள் நினைவுகள் என்றும் எம்மை விட்டு நீங்காது நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;

அன்பு மனைவி,
அன்பு மகன்மார், சகோதரர்கள்,
சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிகள்,
மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள், நண்பர்கள், ஊழியர்கள்.

"கந்தன் கருணை",
ஐயனார் கோவிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்,

(21036)


## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**A/L 93, 94**
புதிய பிரிவு
ஆரம்பமாகிவிட்டது.

**A/L 92**
(சனி - ஞாயிறு)
வினா - விடை வகுப்பு
ஆரம்பம்:
23 - 05 - 1992

**A/L 92**
வினா - விடை
DAY CLASSES
ஆரம்பமாகிவிட்டது.

**Spoken - English**
புதிய பிரிவு
ஆரம்பமாகிவிட்டது.

**O/L**
DAY CLASSES
(Sat. - Sun)
வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.

(சி-2432)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**நாகரெத்தினம் இராசநாயகம்**

தோற்றம்: **05 — 05 — 1922** மறைவு: **18 — 05 — 1990**

அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய், எங்களை வழிநடத்திய எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் மறைவை தாங்க முடியாமல் தவிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய கடவுளை பிரார்த்திக்கின்றோம்!

— குடும்பத்தினர்.

'சந்திரிகை',
சிவகுல வீதி,
உரும்பராய்.

(21038)

## ஓராண்டு நினைவஞ்சலி



**ஆச்சிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை**

திதி: 18—05—1992

மலர்ந்த மதிமுகமும், மகிழவைக்கும் சொல்லழகும் வானத்துச் சந்திரன் போல் வாழ்நாளில் உறவினர் வாழ்வுக்கு ஒளிவிளக்காகவும், கரைசேர நினைப்போர்க்கு கலங்கரை விளக்காகவும் நின்று எங்களை வாழவைத்த பாசத்தின் இருப்பிடமே! பண்பு நிறை பூரணமே! கண்கள் சிந்தும் கண்ணீர் எமது கவலையை ஆற்றாது. நித்தியமும் அன்பின் வடிவாய் விளங்கிய எமது அருமைத் தெய்வமே! உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

சகோதரி, உற்றார்,
உறவினர்கள்.

புதுவளவு,
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

[21030]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சகல அளவுகளிலும் ஒரு நூல், அரை நூல் கண்ணாடிகள் நியாயமான விலையில் விற்பனைக்குண்டு. உங்கள் படங்களை சிறந்த முறையில் பிறேம் செய்து கொள்ளலாம். யாழ். கண்ணாடி நிலையம், புதிய இல: 234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [21037]

### விற்பனையாகின்றன

உயர் கல்விப் பதிப்பகம் (கொழும்புத்துறை) வெளியிட்ட A/L கடந்த கால வினாக்களும், விடைகளும், புலமைப் பரிசில் பரீட்சை, கடந்த கால வினாக்களும், விடைகளும், திருமண அழைப்பிதழ்களும், இன்னும் பல பாடசாலை உபகரணங்களும் விற்பனையாகின்றன. மண்டேலா புத்தகசாலை, இல. 2, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். அரஸ் பத்தக நிலையம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (20983)

### அச்சுக்கோர்ப்பாளர் தேவை

அச்சுக் கோர்ப்பாளர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். பயிலுநர்களுக்கும் இடமுண்டு. 20-05-92 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும், இல. 842 மே/பா உதயன். (சி-2297)

### மணமகன் தேவை

32 வயது சதய நட்சத்திர பெண்ணுக்கு வெளிநாட்டு, உள்நாட்டில் வியாபாரம் செய்யும் மணமகன் தேவை. செ. விசயரத்தினம், இலக்சுமி திருமணசேவை, நவாலி கிழக்கு மானிப்பாய் [21031]

### தேவை

டியூட்டரி வாங்கு, மேசை உடன் தேவை. தொடர்பு: விக்னா கல்வி நிறுவனம், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-2421]

எமது மருத்துவமனைக்கு உடனடியாக டாக்டர் தேவை. M. B. B S. தகைமையுடையோர் விண்ணப்பிக்கலாம். வைத்தியப் பொறுப்பதிகாரி, சென்றல் நர்சிங் ஹோம், திருநெல்வேலி. [21029]

பாலர் பாடசாலையில் கற்பிக்க பாலர் பாடசாலைப் பயிற்சி பெற்ற ஆசிரியை தேவை. தகமைகளுடன் செயலாளர், மனோன்மணி சனசமூக நிலையம், நந்தாவில் அம்மன் கோவிலடி, கொக்குவில் என்ற முகவரிக்கு உடன் விண்ணப்பிக்கவும். [20970]

---

**93 பொறியியல் (Mechanics)**

நாளை
**19-05-1992**
Tue. 4-30 — 6-30

**Mr. ஜெயசீலன்** B.Sc. (Hons.)

**'A' Level Centre**
Ist Lane,
Point Pedro Road,
Jaffna.
[சி-2431]

---

**C.C.A.**
யாழ்ப்பாணம்.
**A/L 92**
Day Classes

பொருளியல் — உதயன்
(வரவு-செலவுத்திட்டம், சென்மதி நிலுவை, தியறி)
கணக்கியல் — ஸ்ரீ
வர்த்தகம் — இரட்ணம்
நடைபெறுகின்றது.
[சி-2411]

## நஷ்ட ஈடு வழங்க உத்தரவு

தமிழ் நாட்டில் இருந்து திரும்பிய இலங்கைத் தமிழ் அகதிகள் வவுனியாவில் உள்ள தமது வீடுகளை புனர்நிர்மாணம் செய்வதற்கு நஷ்ட ஈடு வழங்கும் படி புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாண அமைச்சர் பி தயாரத்தினா உத்தரவிட்டிருக்கிறார்.

இத்தகவலை புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவர் திலக் சந்திரசேகரா தெரிவித்தார். [த-ஈ]

---

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்
(ஸ்ரான்லி)

## அஞ்சலித்து நிற்கிறது



## ஆறுமுகம் சுப்பிரமணியம்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 03 — 04 — 1918 | 13 — 05 — 1992 |

'நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு'

— வள்ளுவர் வாசகம்.

விளையாட்டுக் கழகம்,
சாரணர் இயக்கம்,
விடுதி மாணவர் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

[4863]

---

## சீன் கல்வி நிலையம்
திருநெல்வேலி.

## O/L DAY CLASSES

புதிய பிரிவு:

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — | திரு. சகுணாகரன் |
| தமிழ் | — | திரு. புலவர் சிவா |
| சமூகக்கல்வி | — | திரு. மகேஸ் |
| ஆங்கிலம் | — | திரு. M. A ஹரி |
| வர்த்தகம் | — | திரு. கேசவன் |

ஆரம்பம்: நாளை (19-05-1992)
[காலை 8 - 00 மணி (சி-2428)

---

## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



டாக்டர்
## பரமேஸ்வரன் சிறீதரன்

| தோற்றம்: | மறைவு; |
|---|---|
| 22-09-1953 | 19-04-1992 |

மூளாய் மருத்துவ மனையில் அரும்பணி ஆற்றிய அன்புருவச் செம்மலே,

சிறந்த நிர்வாகியாகியும், வைத்தியக் கலையின், நுண்மைகளை நன்குணர்ந்து, நோய் நாடி நோயின் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி, நோய் தீர்த்த வைத்திய நிபுணனாயும் திகழ்ந்த மதிப்புக்குரிய பெரியோய்,

கனிந்த சொல்லும், மலர்ந்த முகமும், பொறுப்புணர்ச்சியும் ஒழுங்கமைந்த நற்குடிப் பிறந்த சான்றோனே,

அருந் துயருற்ற பெரும் பிணியாளரைக் காலன் அணுகாமல் காத்து வாழ வைத்தனையே,

என்றும் சுக வாழ்வின் ஓவியமாகத் திகழ்ந்தனையே,

மருத்துவ மனையிலும், நல்வாழ்வற்ற நலம் பெறு மனையிலும் காலன் நின்னை அணுகிட அஞ்சி அரும் பணி முடித்து வீடு செல்லும் தனிவழி யதனில் நின்னுயிர் தன்னை கவர்ந்து சென்றனனே!

வையக மீதனில் பிறந்தோர் பலரும் பிணி, மூப் பெய்தி உயிர் நீத்திடுவர்,

காலன் நின்னை யௌவனம் கடந்த நடுவயதனில் கவர்ந்து சென்றனனே!

மருத்துவ மனையில் நின் பணி நிரப்பிட எத்தனை வைத்தியர் வரினும் நினது பண்பும், வைத்தியத் திறனும் அமைந்திட வேண்டுமே!

திரும்பிய திசை யெலாம் நின் முகம் தோன்றிட மருத்துவ மனையும் செயல் இழந்ததுவே,

ஆரொடு நோகோம் ஆர்க்கெடுத்து உரைப்போம்.

பிறந்தவர் இறப்பதும், இறந்தவர் பிறப்பதும் இவ்வையகத் தியற்கை எனத் தெளிவுற்று மனத்தைத் தேற்றினோம்.

நல்லோர் தமக்கு இன்னருள் புரியும் இறைவன் நினக்குச் சிவபதம் நல்கி பேரின்பம் நுகரும் பெரும் பேறதனை அருள்க என்று அவன் தாள் வணங்கி வாழ்த்தும் யாமே.

மூளாய் வைத்தியசாலைப் பணிப்பாளர்,
வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள்,
ஊழியர்கள்.

[21034]

---

# பாரதிதாசன் கல்வி நிறுவனம்
## (BECON)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 92 *DAY CLASSES*

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| கணக்கியல் | — | சௌந்தி |
| வர்த்தகம் | — | பசில் |
| தமிழ், இந்துநாகரிகம் | — | அமரசிவம் |

| பிரிவு I கோட்பாடுகள் வினா-விடை | பிரிவு II மீட்டல் வினா-விடை |
|---|---|
| 1-00 — 3-00 | 11-00 — 1-00 |
| 9-00 — 11-00 | 1-00 — 3-00 |
| 11-00 — 1-00 | 9-00 — 11-00 |
| 9-00 — 10-00 | 9-00 — 10-00 |
| 8-00 — 9-00 | 8-00 — 9-00 |

ஆரம்பம்: 21 - 05 - 1992 வியாழன் 8-00 a. m.

★ பொருளியல் வினா-விடை வகுப்பு செவ்வாய், வியாழன் 3-00 — 4-00 மணிவரை நடைபெறுகின்றது.

[சி-2336]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சொந்தப் புத்தியுடன் செயற்படுக

விடுதலைப் புலிகளை இந்தியாவில் தடை செய்ததைத் தொடர்ந்து, இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் புதுடில்லி அரசு மீண்டும் தலையிடும் சாத்தியம் உண்டு என்றும்—

அதற்கு இடம் கொடுக்காது கொழும்பு அரசு இனப்பிரச்சினையை விரைந்து தீர்க்க வேண்டும் என்றும்—இப்பத்தியில் நேற்று வலியுறுத்தி இருந்தோம்.

இந்தியா புலிகளைத் தடை செய்து விட்டதால், இனப்பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் பேச முனைவது எவ்விதத்திலும் பாதிப்படைய மாட்டாது, நிறுத்தப்படமாட்டாது என்று கொழும்புச் செய்திகள் நம்பிக்கை தெரிவிக்கின்றன.

ஆனால் எந்த விடயத்திலுமே குழப்பங்காய்ச்சிகளாக உள்ள எதிர்க்கட்சிகள் இது விடயத்திலும் குறுகிய பார்வையைக் கொண்டிருக்கின்றன

ஸ்ரீலங்கா அரசாங்கமும், இந்தியா செய்தது போல, விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கேட்டிருக்கிறது. அதற்கு ஒத்து ஊதுவது போல, கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் சில கருத்து வெளியிட்டிருக்கின்றன.

விடுதலைப் புலிகளுக்கு இந்தியா தடைவிதித்தமை ஸ்ரீலங்கா அரசு தடைவிதித்தமைக்குச் சமம் என்று எடுத்துக்கொண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முழுப் பொறுப்பும் தெரிவுக்குழுவினுடையதே என்று தெரிவித்திருக்கின்றன.

விடுதலைப் புலிகள் தடை செய்யப்பட்டுவிட்டதால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய தேவை இல்லை. ஏனைய கட்சிகளுடன் இதுவரை நடத்திய ஆலோசனைகளை வைத்துக்கொண்டு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒரு தீர்வை வகுக்க வேண்டும் என்பது அந்தக் கட்சிகளின் கருத்தாக இருக்கிறது.

இக்கட்சிகள் சந்தர்ப்பத்தை தமக்குச் சாதகமாக்கி, புலிகளை ஓரங்கட்டி விட்டு தமது முயற்சியால் தீர்வு கிடைத்ததாகக் காட்டிக்கொள்ள விரும்புகின்றன.

ஆனால் விடுதலைப் புலிகளைப் புறக்கணித்து விட்டு தீர்வு ஒன்றைக் காண முடியாது என்பதே உண்மை; யதார்த்த நிலை. அவ்வாறு காணப்படும் தீர்வு நிலையானதாக, நிரந்தரமானதாக, வெற்றி தருவதாக, அமைதிச் சூழலை உண்டாக்கக்கூடியதாக இருக்க முடியாது.

விடுதலைப் புலிகளை இப்போது தடை செய்திருக்கும் இந்தியாவே அனுபவத்தில் கண்ட ஒன்று இது. தமிழர் பிரச்சினைக்குள் விரலை வைத்த இந்தியா அது விடயத்தில் தோல்வி கண்டதற்கும் புலிகளைப் புறக்கணிக்க முனைந்ததே காரணம். இதனை இந்திய அதிகாரிகளே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே ஸ்ரீலங்கா அரசு இந்தியாவுக்கு நேர்ந்த கதியை ஒரு முன்னெச்சரிக்கையாகக் கொண்டு, மற்றவர்கள் புத்தி கேளாமல் தனது சொந்தப் புத்தியுடன் விவேகமாக நடந்து கொள்வது நல்லது. அப்படியே செய்யும் என நம்புவோமாக.

# அகதி முகாமில் தஞ்சமடைந்திருந்த இரு தமிழ் ஆசிரியைகள் கைது!

யாழ்ப்பாணம், மே, 18

அலிஞ்சிப் பொத்தனையில் அண்மையில் நடந்த படுகொலைச் சம்பவங்களை அடுத்து முத்துகல அகதி முகாமில் தஞ்சமடைந்திருந்த இளம் தமிழ் ஆசிரியைகள் இருவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

அலிஞ்சிப்பொத்தனை முஸ்லிம் பாடசாலை ஒன்றில் கடமை புரியும் அந்த இருவரும் அங்கு நடந்த வன்முறைச் சம்பவங்களில் தமது குடும்ப அங்கத்தவர்களையும், உடைமைகளையும் இழந்த நிலையில் தஞ்சமடைந்திருந்தனர் என்றும்—

அவர்கள் பற்றி சிலர் பொய்யான தகவல்களை பொலீஸாருக்குக் கொடுத்ததன் பேரிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [த-5]

## மன்னாரில் வீடுகள் இராணுவத்தினால் உரியவர்களிடம் கையளிக்கப்படுகின்றன

கொழும்பு, மே 18

மன்னார், பேசாலை ஆகிய இடங்களில் வீடுகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு பத்திரிகை ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கிறது.

கடந்த ஒன்பது ஆண்டுகளாக பேசாலையில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த வீடுகள் இப்பொழுது உரியவர்களிடம் கையளிக்கப்பட்டு வருகின்றன என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [த-எ]

### தொண்டாவின் கருத்து

கொழும்பு, மே 18

எமது நாட்டுக்கு இன்று தேவைப்படுவது அமைதியும் சமாதானமுமே.

அமைச்சர் தொண்டமான், விடுதலைப் புலிகள் மீது இந்தியா தடை விதித்திருப்பது குறித்து கருத்து வெளியிடுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார். [த-எ]

### தமிழ்மொழி மூலம் கம்பியூட்டர் பயிற்சி

கொழும்பு, மே 18

தேசிய இளைஞர் சேவைகள் சங்கம் மாவட்ட ரீதியாக நடத்தி வரும் தமிழ் பேசும் இளைஞர், யுவதிகளுக்கான தமிழ் மொழி மூலமான கம்பியூட்டர் பயிற்சி நிலையம் ஒன்று நுவரெலியா மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ளது.

அந்தப் பயிற்சி நெறியில் இணைந்து பயில விரும்பும் இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. [த-5]

### நன்றித் திருப்பலி

யாழ்ப்பாணம், மே 18

யாழ். ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் வெள்ளி, பொன், பவள விழாவை முன்னிட்டு, தீவக மக்களின் அன்பையும், நன்றியையும் தெரிவிக்கும் முகமாக இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். மரியாள் பேராலயத்தில் நன்றித் திருப்பலி இடம்பெறும். [த]

### டீசலுக்கு பதில் ம. எ.

யாழ்ப்பாணம், மே 18

யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்களின் பிரயாண சேவைக்காக பாவிக்கப்படும் மினிபஸ்களுக்கு டீசலுக்குப்பதில், மண்ணெண்ணெய்யும், ஒயிலும் வழங்கப்படுகிறது. (த-15)

## சம்பந்தர் திருமுறைச் சுவடி திருவீதி ஊர்வல பெருவிழா

யாழ்ப்பாணம், மே 18

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் குருபூசை தினத்தை முன்னிட்டு அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் ஏற்பாடு செய்துள்ள திருமுறை இன்னிசை கோஷ்டியுடனான திருமுறைச் சுவடி திரு வீதி ஊர்வலம் நாளை செவ்வாய்க்கிழமை நல்லூர் ஸ்ரீ சட்டநாத சுவாமி ஆலயத்தில் நடைபெறும்.

அன்று காலை 6-30 மணிக்கு விசேட பூஜையுடன் விழா ஆரம்பமாகும். திருவீதி ஊர்வலம் மன்றத்தலைவர் திரு. க. சொக்கலிங்கம் [சொக்கன்] தலைமையில் நடைபெறும்.

நல்லூர் ஸ்ரீ சட்டநாத சுவாமி கோவிலில் ஆரம்பமாகும் ஊர்வலம் கல்வியங்காடு சந்தி, ஆடியபாதம் வீதி, இராணி வீதி, செல்லர் வீதி, செம்மணி வீதி. முத்திரைச் சந்தி, பருத்தித்துறை வீதி, நல்லூர் கந்தசுவாமி கோவில், நல்லை ஆதீனம், நல்லை சிவன் ஆலயம், சங்கிலியன் வீதி, பண்டாரக்குளம் பிள்ளையார் வீதி ஆகிய இடங்களினூடாகச் சென்று மீண்டும் சட்டநாத சுவாமி கோவிலை அடையும். [த]

### சைவச் சிறுவர் இல்ல

# சிறுவரை உயர்ந்தோராக்கும் பொறுப்பு சகலருக்கும் உரியது

### திறப்பு விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், மே 18

இங்கே உள்ள குழந்தைகள் ஆண்டவனின் குழந்தைகள். அவர்கள் அனாதைகள் அல்லர். அவர்களுக்கு நல்ல கல்வியறிவூட்டி சமூகத்தில் உயர்ந்த மனிதர்களாக மாற்றும் பொறுப்பு எல்லோருக்கும் உரியது.

இவ்வாறு கைதடி சைவச் சிறார் இல்லத் திறப்புவிழாவில் உரையாற்றிய கலாநிதி சி. க. சிற்றம்பலம் கூறினார்.

இந்து சமய பேரவையின் தலைவர் ஆத்மஜோதி முத்தையா தலைமையில் திறப்பு விழா நிகழ்ச்சிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன. நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு ஆ. மகாலிங்கமும், கலாநிதி சிற்றம்பலமும் மங்கள விளக்கேற்றி இல்லத்தைத் திறந்து வைத்தனர்.

கலாநிதி சிற்றம்பலம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

சமய உணர்வு, சமய ஈடுபாடு, சமயத்தோடு சேர்ந்த கல்வி தேவை. போசாக்கு என்பது உணவில் மட்டுமல்ல; உரிய கல்வியிலும் உண்டு. இந்தச் சிறார்களின் மீதான நமது பராமரிப்பின் தன்மைகளே அவர்கள் சமூகத்தில் உயர்ந்தவர்களாகவும், நலிவுற்றவர்களாகவும் உருவாக வழிவகுக்கும். ஆகையால் அவர்களின் வளர்ச்சிக்கு பல்வேறு துறையினரும் பூரணத்துவமான பங்கை வழங்க வேண்டும் — என்றார்.

கல்வியிலும் துயருற்று வாழும் மக்களுக்குத் தொண்டாற்றும் மனப்பாங்கிலும் சிறந்து விளங்கும் பிரஜைகளாக எதிர்காலத்தில் விளங்கக் கூடியதான ஆற்றலை இங்குள்ள சிறார்கள் பெறக் கூடியதாக எமது பணி அமைய வேண்டும் — என்று ஆத்மஜோதி முத்தையா தெரிவித்தார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் தமது ஆசியுரையில் —

மாணவச் செல்வங்களை நல்ல பிரஜைகளாக உருவாக்கி நாட்டிற்கு அளிக்க வேண்டிய பெரிய பொறுப்பை மேற்கொள்ளும் பணி இது. மதமும், இனமும் ஒன்றுபட்டு இதற்காகச் செயலாற்ற வேண்டும். பிற மதங்களில் உள்ள சேவையாளர்களைப் போன்று இந்து மதத்திலும் நிறைந்த சேவையாளர்கள் உருவாக வேண்டும். இன்றைய போர்க்கால சூழ்நிலையில் நெருக்கடிகளின் மத்தியில் இது போன்று சேவைகளில் இந்து பேரவை சிறந்த பங்களிப்புக்களைச் செய்ய முன்வருவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன் — என்றார்.

இல்லத்தைத் திறந்து வைத்துப் பேசிய சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கூறியதாவது;

இறைவனுக்குக் கொடுப்பதிலும் பார்க்க ஏழைகளுக்குக் கொடுப்பதையே இறைவன் விரும்புகிறான். சிவம் என்பதன் அர்த்தம் அன்பு. அதனால் தான் அன்பே சிவம் என்று சைவம் கூறுகிறது. எமது மக்களின் துயர்துடைப்புக்காக இன்றைய தேவையை அறிந்து செய்யும் இந்தப் பணியினால் ஆதரவற்ற எமது சிறார்களின் எதிர்காலம் பயனுள்ளதாக அமையும்.

இது போன்ற சேவைகளுக்கு உதவ எத்தனையோ தாபனங்கள் தயாராக உள்ளன. லண்டனில் உள்ள தமிழ் அனாதைகள் நிறுவனம் உட்பட பல்வேறு நிறுவனங்கள் உதவி வழங்கத் தயாராக உள்ளன — என்றார்.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு பு. சுந்தரம்பிள்ளை, திரு. ஐ. சக்திக்கிரிவன், திரு. சர்மா ஆகியோரும் உரையாற்றினர்

சிறுவர் இல்லத்தை இதுவரை பராமரித்து வந்த குலபதி க. ஆறுமுகத்துக்கு, சிவதர்மவள்ளல் க. கனகராசா வழங்கிய பொன்னாடையை, நல்லை ஆதீன முதல்வர் போர்த்திக் கௌரவித்தார். (அ-111)

### வி.பி. சிங் காங்கிரஸில் சேர்ந்திருப்பாராம்

திரு. வி. பி. சிங்குக்கு நிதி அமைச்சர் வழங்கப்பட்டிருந்தால், அவர் சில மாதங்களுக்கு முன்னரே இந்திரா காங்கிரஸில் சேர்ந்திருப்பார்.

ஜனதா தள் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டவரும், முன்னாள் ஜனதாதள் மத்திய அமைச்சருமான திரு. அஜித்சிங் முன்கண்டவாறு தெரிவித்தார். [த-எ]

# அபிவிருத்தி நடவடிக்கை கைவிடப்படமாட்டாது!

### யாழ். அரச அதிபர் உரை

யாழ்ப்பாணம், மே 18

எந்தச் சூழ்நிலையிலும் எமது அபிவிருத்தி நடவடிக்கைகள் கைவிடப்படமாட்டா. கிராமிய மட்டத்தில் உள்ள நமது மக்களிடையே மறைந்து கிடக்கும் ஆற்றல், திறமை என்பவற்றை வெளிக்கொணர்ந்து பொருளாதார சுபீட்சத்துக்கும் வளங்களைப் பயன்படுத்தும் தன்மைக்கும் தொடர்ந்து புத்துயிரூட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இவ்வாறு தெரிவித்தார்.

கிராம அபிவிருத்தி திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த தையல், மனையியல் கைப்பணிப் பொருட் காட்சியை நாவலர் மண்டபத்தில் ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு சொன்னார். திருமதி யோ. மாணிக்கவாசகர் பொருட்காட்சியைத் திறந்து வைத்தார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:

குறுகிய காலப் பயிற்சியில் தமது திறமையை வெளிப்படுத்தியிருக்கும் பயிற்சியாளர்களுக்கு பொது மக்கள் தமது பூரண ஆதரவை அளிப்பதன் மூலம் கிராமிய அபிவிருத்திக்கும் புத்துயிர் அளிக்க வேண்டும். வசதி குறைந்த மக்களின் இது போன்ற பயிற்சி நிலையங்களை விரிவு படுத்தி, தொழில்துறைக்கு உற்சாகம் வழங்க நாங்கள் காத்திருக்கின்றோம்— என்றார்.

பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திரு. செ. சுவாமிநாதன், திட்டமிடல் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன், மேலதிக அரச அதிபர் திரு. க. சண்முகநாதன், பிரதேசச் செயலாளர் திரு. க. குணராசா, மாநகராட்சி ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் உட்படப் பலர் நிகழ்ச்சியில் உரையாற்றினர்.

(த-111-143)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழகத்தில் தீவிர தேடுதல்

சென்னை, மே 18

விடுதலைப் புலிகள் இயக்கம் மீது இந்திய அரசு தடை விதித்ததைத் தொடர்ந்து, தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு எதிராக தீவிர தேடுதல் நடத்தப்பட்டு வருவதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

தமிழ் நாட்டில் தங்கி உள்ள இலங்கைத் தமிழர்கள் தமது இல்லங்களில் விடுதலைப் புலிகளையோ அல்லது அவர்களின் ஆதரவாளர்களையோ தங்க இடமளித்தால், அது சட்டப்படி தண்டனைக்கு உரிய குற்றமாகும் என்று தமிழகப் பொலீஸ் வட்டாரங்கள் அறிவுறுத்தியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இந்தியக் கடற்படையினர் தமிழகக் கரையோரப் பகுதிகளில் கண்காணிப்புகளைத் தீவிரப் படுத்தியுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (உ-எ)

## பூநகரி வாடியடிப் பகுதியில் பொதுமக்கள் மீது சூடு!

### ஷெல்வீச்சில் வீடு எரிந்து நாசம்

யாழ்ப்பாணம், மே 18

பூநகரி, வாடியடி இராமலிங்கம் வீதியில் உள்ள தமது வீடுகளில் பொருள்களை எடுக்கச் சென்ற பொது மக்கள் மீது படையினர் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

பின்னர் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. ஷெல் விழுந்து வெடித்ததில் ஒருவீடு எரிந்து நாசமானது என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-3]

## திருமலையில் தமிழரின் நில உறுதிகள் பறிப்பு

யாழ்ப்பாணம், மே 18

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் கிராமங்களில் வசிக்கும் தமிழர்களின் நில உறுதிகளை அரச செயலக அதிகாரிகள் இராணுவ, ஊர்காவல் படையினரின் உதவியுடன் பறித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மக்களின் நில உரிமையைப் பறிக்கும் வகையில் இந்த நடவடிக்கையில் செயலக அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாகவும்—

பத்தினிபுரம், 45 ஆம் கட்டை ஆகிய பகுதிகளில் தமிழர்களின் நில உறுதிகள் இவ்வாறு பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு இராணுவம் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாகவும்—

இதனால் அப்பகுதி மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே நடவடிக்கை ஏனைய கிராமங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்றும்—

பத்து தமிழ்க் கிராமங்களுக்கு சிங்களப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

### புதுக்குடியிருப்பில் மக்கள் வங்கி

யாழ்ப்பாணம், மே 18

மக்கள் வங்கியின் முல்லைத்தீவுக் கிளையை அடுத்த மாத முதல் வாரத்தில் புதுக்குடியிருப்பில் திறக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு நகரில் அமைந்திருந்த இந்தக் கிளையில் இருந்த ஆவணங்களை கடற்படையினர் திருகோணமலைக்கு எடுத்துச்சென்று வங்கி அதிகாரிகளிடம் ஒப்படைத்திருந்தனர்.

அந்த ஆவணங்கள் இப்பொழுது வவுனியாவுக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர்
### திருமதி கனகேஸ்வரி பரசிவம்

அமரர் திருமதி கனகேஸ்வரி பரசிவம் அவர்களின் 31ஆம் நாள் இன்றாகும். [18-05-1992] திங்கட்கிழமை அன்னாரின் விருப்பத்திற்கு இணங்க வயோதிப இல்லத்திலும், அனாதை இல்லத்திலும் அம்மையாரின் நினைவாக அன்னதானம் மதிய வேளை வழங்கப்படும்,

மேலும் அன்னாருக்கு சிகிச்சை அளித்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதிகள், தாதிகள், நிறுவன உறுப்பினர்கள், மரணச் சடங்கில் கலந்து கொண்டு பல்வேறு வகைகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், அன்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றிகளை நவில்கின்றோம்.

அன்னாரின் நினைவால் துயருறும்,
V.E.A. பரசிவம் குடும்பம்

இல. 8, மருதடி வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(21015)


## கிழக்கில் தொடர்ந்து நடவடிக்கை

கொழும்பு, மே 18

கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

அதிகார வட்டாரங்கள் இதனைத் தெரிவித்ததாக இலங்கை வானொலி நேற்று மாலை அறிவித்தது. [உ-எ]

## களுவாஞ்சிக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வலகத்துக்குச் சென்றபோது அவர்கள் மீது பொலீஸார் தடியடிப் பிரயோகம் செய்தனர் என்பதும் தெரிந்தவையே—

இச்சம்பவத்தின்போது சுமார் நூறுக்கும் அதிக மாணவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும்—

அவர்களில் மேற்படி பத்து மாணவர்கள் தவிர எஞ்சியோர் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பத்து மாணவர்களினதும் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் என்னவானார்கள் என்று பொலீஸ் நிலையத்தில் விசாரித்தபோது தமக்கு அந்தப் பத்துப் பேரையும் பற்றி எதுவும் தெரியாது என்று பொலிஸார் கைவிரித்து விட்டனர் என்று தற்போது அறியவருகிறது. [உ-3]

## அரசியல்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இதேவேளை — இந்திய அரசு நினைத்தால் — புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை எந்த நேரத்திலும் நீக்கப்பட முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இந்தியா விதித்த தடை, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு உண்மையான [Genuine] தீர்வு ஒன்றைக் காண்பதற்கு இலங்கையை ஊக்குவிப்பதாக அமையும் — என்றும் அவர் கூறியுள்ளார்.

திரு. ஜாவின் பேட்டியில் உள்ள முக்கிய பகுதிகள் வருமாறு:-

இலங்கையின் மிக நெருங்கிய அண்டைநாடு என்கிற வகையில் இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் நல்வாழ்வில் இந்தியா உண்மையான கவலை கொண்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினையால் ஏற்படுகின்ற விளைவுகளின் பிரதிபலிப்பு இந்தியாவிலும் ஏற்படுகின்றது. இந்தப் பிரச்சினையை இந்தியா காண மறுக்காது; இவை ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய அரசியல் யதார்த்தங்கள் ஆகும்.

### எச்சரிக்கை

விடுதலைப் புலிகளுடன் இனிமேல் பேச்சுகளைத் தொடங்குவதற்கு முன்னர் இலங்கை அரசு யதார்த்த நிலைமையைக் கருத்திற் கொண்டு சிந்திக்க வேண்டும்.

இந்தியா விதித்துள்ள தடையால் உருவாகியுள்ள சில கடினமான அரசியல் யதார்த்தங்களை இலங்கை அரசு உணரவேண்டும் என்றார்.

இலங்கையில் வடக்கு-கிழக்கு பகுதிகளில் அமைதியை உருவாக்குவதில் இந்தியா ஆற்றக் கூடிய பங்கு பற்றிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில்—

சம்பந்தமில்லாத தரப்பினர் என்பதுபோல இது பற்றிக் கவலை கொள்ளாமல் இந்தியா இருக்கமுடியாது. இந்த விஷயத்தில் இந்தியாவுக்கு முக்கிய பங்கு உண்டு — என்று தெரிவித்தார். [அ-எ-து]

## பலாலி முகாம் கைதிகளை செஞ். குழுவினர் சந்தித்தனர்

பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் நலன்களை அறிந்து கொள்வதற்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் நால்வர் நேற்று முன்தினம் அங்கு சென்றனர்.

யாழ். அலுவலகப் பிரதிநிதி தலைமையில் சென்ற செஞ்சிலுவைக் குழுவினர், காவலில் உள்ளோரின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தனர். அத்துடன் அவர்கள் தங்கியுள்ள இடத்தின் சுகாதார மற்றும் வசதிகள் குறித்து ஆராய்ந்தனர்.

உறவினர்கள் வழங்கிய கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

மீண்டும் இன்று அங்கு செல்லும் அதிகாரிகள் அவர்களிடம் இருந்து கடிதங்களை எடுத்து வருவர். [ஓ-3]

## தேவைக்கேற்ப மட்டும்
## வடக்கே கற்பூரம், பற்றரி எடுத்து வருவதற்கு அனுமதி!

கொழும்பு, மே 18

வடக்கே குறிப்பிட்ட சில பொருள்களை எடுத்துச் செல்ல இருந்த தடை ஓரளவு தளர்த்தப்பட்டுள்ளது. அந்த வகையில் கற்பூரம், பற்றரி ஆகியவற்றை தமது தேவைக்கேற்ப எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படுகிறது.

அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் எம். ஐ. எம். ரபீக் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

டாக்டரால் வழங்கப்பட்ட மருந்துச் சிட்டையின் அடிப்படையில் சில மருந்து வகைகளை ஒருவர் தன்னுடன் எடுத்துச் செல்லலாம். அதற்கு அனுமதி தேவையில்லை.

ஆனால் தொகையான மருந்து வகைகளை எடுத்துச் செல்ல அனுமதி பெறவேண்டும். என்றாலும் டிஸ்பிரின், பெனடோல் போன்றவற்றை அனுமதியின்றி கொண்டு செல்லலாம்.

ஏனைய மருந்துப் பொருள்களை எடுத்துச் செல்ல கொழும்பில் மட்டுமே 'பெர்மிட்' வழங்கப்படும். வவுனியாவில் அதற்கு 'பெர்மிட்' பெறமுடியாது. மட்டுப்படுத்தப்பட்ட ஏனைய 43 வகை பொருள்களை வடக்கே எடுத்துச் செல்ல வவுனியாவிலும் இனி 'பெர்மிட்' பெறலாம்.

இவ்வாறு மேலதிக ஆணையாளர் கூறினார். [ஓ-3]

## செவ்வாயில் தரையிறங்க பதினாறு இயந்திரங்கள்

செவ்வாய்க்கிரகத்தின் மண்வளம், கற்பாறைகள் மற்றும் காலநிலை பற்றி ஆய்வு நடத்துவதற்காக அந்தக் கிரகத்துக்கு பதினாறு சிறிய தரை இறங்கும் இயந்திரங்களை அனுப்பி வைக்கும் திட்டம் ஒன்றை அமெரிக்க விண்வெளி ஸ்தாபனம் நாஸா தயாரித்துள்ளது.

இத்தரையிறங்கும் இயந்திரங்கள் [Landers] தற்போது நாஸாவினால் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

1999 ஜனவரிக்கும் 2003 மே மாதத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் இவை நான்கு தனித்தனி ஏவு வாகனங்களில் [Launch Vehicles] செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்று நாஸாவின் ஜெட் உந்து சக்தி ஆய்வு கூடம் அறிவித்துள்ளது

ஒரு செவ்வாய் ஆண்டு வரை இவ்வியந்திரங்கள் செவ்வாய்க்கிரகத்தில் தங்கியிருந்து பூகர்ப்ப ஆய்வுகளை மேற்கொள்ளும் என்றும் நாஸா தெரிவித்திருக்கிறது

ஒரு செவ்வாய் ஆண்டு பூமியின் காலக்கணக்குப்படி 687 நாட்களாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## யுத்தத்தை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செயலாளர் திரு. எச். பி. திசநாயக்கா செய்தியாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

வரவு—செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவுக்கு ஒதுக்கிய பணத்தைவிட மேலதிகமாக 540 கோடி ரூபா தேவைப்படுகிறது என்றால் ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்புச் செலவு நாளாந்தம் கட்டுப்பாடில்லாமல் உயர்ந்து கொண்டிருக்கிறது என்பதே அர்த்தம் என்று பொருளியல் கரிசனை உள்ள வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் பாதுகாப்பு வரி மூன்று சதவீதமாக உயர்த்தப்பட்டிருப்பது குறித்து நிதி திட்டமிடல் அமைச்சு வெளியிட்ட விளக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ பாதுகாப்பு செலவினங்களிலும் அகதிகள் தொடர்பான செலவினங்களிலும் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பை ஈடு செய்வதற்காகவே மேலதிக வரி விதிக்கப்படுகிறது

★ தேயிலை மற்றும் றப்பரின் உலகச் சந்தை விலைகளில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சி காரணமாகவும் ஏற்றுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாகவும் வருவாய் திரட்டலில் அரசாங்கம் ஒரு வீழ்ச்சியை எதிர் நோக்குகின்றது.

★ பாதுகாப்பு வரி மீதான இவ்வதிகரிப்பு சகல பொருள்களையும் அவற்றின் உற்பத்தி நிலையிலும் இறக்குமதி நிலையிலும் தாக்கத்துக்குள்ளாக்கும். அத்துடன் குறிப்பிட்ட சில விசேட சேவைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். ஏற்றுமதி தயாரிப்புகளுக்கு தேவையான பொருள்களின் இறக்குமதிகளுக்கு இந்த பாதுகாப்பு வரியிலிருந்து விலக்களிக்கப்படும். (அ)

## விநியோகம்

குருநகர் மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் ஏழாவது தொடர் உணவு முத்திரைகள் இப்பொழுது விநியோகிக்கப்படுகின்றன.

உணவு முத்திரை வைத்திருப்போர் புதிய முத்திரைத் தொகுதிகளை வந்து பெற்றுக் கொள்ளுமாறு கிராம சேவையாளர் திரு. எ. அலெக்ஸிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார். [உ-51]

## இருநூல்கள்...

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நாளை மறுதினம் புதன் பிற்பகல் 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்ச்சியில் பேராசிரியர் அ. சண்முகதாஸ், கவிஞர் சோ. பத்மநாதன், திருமதி அம்மன்கிளி முருகதாஸ் ஆகியோர் நூல்களை அறிமுகம் செய்து உரை நிகழ்த்துவர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18 - 05 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org